**பிப்ரவரி – 28**

# TNPSC துளிகள்

- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 21-ம் தேதி, சென்னையில் தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபாவில் மகாத்மா காந்தியின் சிலையை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்தார்.
- பீகார் அரசு வேலைவாய்ப்பிலும் கல்வி நிலையங்களிலும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு 10 சதவிகித இடஒதுக்கீடு அளிப்பதற்கான அறிவிக்கையை வெளியிட்டு இருக்கின்றது.
- மராத்தி பாஷா தின் மற்றும் மராத்தி பாஷா திவஸ் என்றும் அறியப்படும் மராத்தி மொழி தினம் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 27-ம் தேதி புகழ்பெற்ற மராத்தி கவிஞர் விஷ்ணு வர்மன் ஷிர்வத்கர் என்பவரது பிறந்த நாள் ஆண்டு விழாவை அனுசரிப்பதற்காக கொண்டாடப்படுகின்றது.
- தேசிய எய்ட்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் எதிர்ப்புக் குறைபாட்டை அடையப் பெற்ற நோய் (AIDS - Acquired Immuno-deficiency Syndrome) மீதான தனது ஆராய்ச்சியின் கவனத்தை கைவிட்டு வரும் காலங்களில் புதிய பெயர் மாற்றத்திற்கு செல்ல முடிவெடுத்திருக்கின்றது.
- வாரணாசியில் உள்ள மன் மகாலில் பிரதமர் ஒரு மையப்படுத்தப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட ஆய்வு மையமாக இந்திய அகழ்வாராய்ச்சி மையத்தின் கீழ் ஒரு மெய்நிகர் அனுபவம் கொண்ட அருங்காட்சியகத்தைத் துவக்கி வைத்தார்.
- அரசு சாராக் குழு ஒன்றினால் வெளியிடப்பட்ட சிஸ்த் பாரத் பரப்புரை ஒழுக்கம், குடிமையியல் அறிவு, பணிவு, நல்லொழுக்கம் மற்றும் கண்ணியம் ஆகிய விழுமியங்களைப் பற்றி விழிப்புணர்வூட்டி இந்தியக் குடிமக்களின் நெறிமுறை குணாதிசயங்களை வலுப்படுத்த எண்ணுகின்றது. இது டாக்டர் அஞ்சலி குவாத்ராவின் பாதுகாப்புப் பயிற்சி முன்னெடுப்பு அமைப்பின் ஒரு முயற்சியாகும்.
- இந்திய பிரதமர் தனது தென்கொரிய சுற்றுப் பயணத்தின் போது சியோல் நகரத்தில் இந்திய கொரிய ஸ்டார்ட் அப் மையத்தைத் துவக்கி வைத்தார்.
- தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம், நாக்பூரில், அனற் காற்று மீதான இரண்டு நாள் தேசிய கருத்தரங்கை நடத்தியது.
- 2018 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு வீரர் விருதினை ஆசிய ஹாக்கி கூட்டமைப்பு இந்திய அணித் தலைவர் மன்ப்ரீத் சிங்கிற்கு வழங்கி கௌரவித்திருக்கின்றது.
    - பெண்கள் அணியின் அதிரடி ஆட்டக்காரர் லால்ரேம் சியாமி ஆண்டிற்கான எழுச்சி நட்சத்திர வீரர் விருதினை வென்றிருக்கின்றார்.
- மத்திய இரயில்வேத் துறை அமைச்சர் பியூஸ் கோயல் ரயில் திருஷ்டி என்ற அறிவிப்புப் பலகையைத் துவக்கி வைத்தார்.
    - இது இந்திய இரயில்வேயில் உள்ள அனைத்து டிஜிட்டல் மயமாக்கும் முயற்சிகளையும் ஒருங்கிணைக்கும். மேலும் இது வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையையும் ஊக்குவிக்கும்.
- உலக நீடித்த ஆற்றல் தினங்கள் என்பது இந்த துறையில் நடத்தப்படும் ஐரோப்பாவின் மிகப்பெரிய வருடாந்திர மாநாடுகளில் ஒன்றாகும். 2019 ஆம் ஆண்டின் மாநாடு ஆஸ்திரியாவின் வெல்ஸ் நகரில் பிப்ரவரி 27 முதல் மார்ச் 01 வரை நடத்தப்படும்.

# தமிழ்நாடு செய்திகள்

## இலவச மடிக்கணினி திட்டம்

- பிப்ரவரி 27-ம் தேதியன்று தமிழ்நாடு முதல்வர் 2018-19 ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர்களுக்காக இலவச மடிக்கணினித் திட்டத்தை துவக்கி வைத்தார்.
- இக்கல்வியாண்டின் போது ஏறக்குறைய 15.18 லட்சம் மாணவர்கள் இலவச மடிக்கணினி வழங்கப்படுவர்.
- அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 5.12 லட்சம் மாணவர்களின் நலனிற்காக இந்த வருடம் முதல் பதினோராம் வகுப்பு மாணவர்களிடமே மடிக்கணினி வழங்கும் கொள்கை முடிவை அரசு எடுத்துள்ளது.
- இவ்வருடம் முதல், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 12-ம் வகுப்பு மாணவர்களுடன், 11-ம் வகுப்பு மாணவர்களும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக்குகளில் பயிலும் முதலாம் வகுப்பு மாணவர்களும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளிகளில் பயிலும் 11-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களும் இப்பலனைப் பெறுவர்.

# தேசியச் செய்திகள்

## அவசரச் சட்டம் பிரகடனப்படுத்துதல்

- மத்திய அமைச்சரவை பின்வரும் முன்மொழிவுகளுக்காக அவசரச் சட்டப் பிரகடனப்படுத்துதலை அங்கீகாரம் செய்திருக்கின்றது.
- இந்திய மருத்துவக் குழு (திருத்தம்) மீதான இரண்டாவது அவசரச் சட்டம் 2019.
    - இந்திய மருத்துவக் குழுவின் உறுப்பினர் மாற்று நியமனச் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் மன்றம் இரண்டு வருடங்கள் வரையிலோ அல்லது இக்குழுமாற்றியமைக்கப்படும் வரையிலோ இந்திய மருத்துவக் குழுவின் அதிகாரங்களை செயல்படுத்த வழிவகை செய்கின்றது.
- நிறுவனங்கள் (இரண்டாவது திருத்தம்) அவசரச் சட்டம் 2019
    - இது மத்திய அரசை தீர்ப்பாயங்கள் முடிவு செய்த நிதியாண்டிற்குப் பதிலாக நிறுவனங்கள் தங்களுக்கென்று புதிதாக ஒன்றை மேற்கொண்டிட அனுமதியளித்திட வழிவகை செய்கின்றது.
- முறைப்படுத்தப்படாத வைப்புத் திட்டங்களைத் தடை செய்யும் அவசரச் சட்டம் 2019.
    - இது முறைப்படுத்தப்படாத வைப்புத் திட்டங்களை தடுக்கவோ அல்லது அத்திட்டங்களுக்கான ஏற்பாடுகளை ஆரம்பத்திலேயே தடுக்கவோ எண்ணுகின்றது. மேலும் இம்மாதிரியான வைப்புத் திட்டங்களில் முதலீடுகளை ஏற்பதோ அல்லது முதலீடு செய்ய அழைப்பதோ ஒரு தண்டனைக்குரிய குற்றமாக கருதுகின்றது.

## டிஜிட்டல் இந்தியா விருதுகள் 2018

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் தேசிய தகவலியல் மையத்தால் நிறுவப்பட்ட இந்தியாவின் தேசிய இணைய வாயிலின் வரம்பிற்குள் டிஜிட்டல் இந்தியா விருதுகள் ஏற்படுத்தப்பட்டன.
- உலகளாவிய வலையமைப்பு ஊடகத்தைப் பயன்படுத்தி சிறப்பான மின்-நிர்வாக முன்னெடுப்புகளை ஊக்குவித்திட இது எண்ணுகின்றது.
- மத்திய மின்னணு & தகவல் தொழில்நுட்பம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் ஒரு தனித்துவம் வாய்ந்த நிகழ்ச்சியில் "டிஜிட்டல் இந்தியா விருதுகள் 2018" என்ற விருதுகளை வழங்கினார்.
- வெற்றியாளர்கள் பின்வருமாறு:

| Category | Platinum | Gold | Silver |
|---|---|---|---|
| Web Ratna – MINISTRY / DEPT | Ministry of Micro, Small & Medium Enterprises | Department of Financial Services | Ministry of Youth Affairs & Sports |
| Exemplary Online Service | Government e-Marketplace | Central Board of Secondary Education | Goods and Services Tax |
| Best Mobile App | eCourts Services | ePathshala | • T App Folio<br>• Mobile Meeseva App - Andhra Pradesh |
| Emerging Technology | Rajkot Eyeway Project | Blockchain Implementation in Land Records, Andhra Pradesh | Crop Area Estimation and Loss Assessment for the State of Gujarat |
| Open Data Champion | Marketing Research and Information Network (AGMARKNET) | • Department of Agriculture, Cooperation & Farmers Welfare<br>• Ministry of Drinking water and Sanitation | • Surat Municipal Corporation<br>• Department of Industrial Policy and Promotion |
| Web Ratna – STATE / UT | Tripura | Himachal Pradesh | Kerala |
| Web Ratna – District | Kurukshetra | • Vellore<br>• Mahbubnagar | • Koraput<br>• East Champaran |
| Outstanding Digital initiative by Local body | Greater Hyderabad Municipal Corporation | Municipal Corporation, Gurugram | Municipal Corporation of Greater Mumbai |
| Jury Choice | | | |
| • MCA21 Application (Ministry of Corporate Affairs)<br>• UMANG - Mobile App | | | |
| Special Mention | | | |
| • E-District Project (Meghalaya)<br>• Andhra Pradesh Real Estate Regulatory Authority | | | |
| • Arunachal Pradesh in Web Ratna – State / UT (North East)<br>• South Tripura District Web Ratna – District (North East) | | | |

## கேலோ இந்தியா கைபேசி செயலி

- புதுதில்லியில் நடைபெற்ற இளைஞர் பாராளுமன்ற விழாவில் கேலோ இந்தியா கைபேசி செயலியை பிரதமர் வெளியிட்டார்.
- இந்த செயலி இந்திய விளையாட்டு ஆணையத்தால் மேம்படுத்தப்பட்டதாகும்.
- இது குறிப்பாக இளைய சமுதாயத்தினரிடையே விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியின் மீதான விழிப்புணர்வை ஏற்படுத்த உதவுகின்றது.




- இது குழந்தைகள் மத்தியில் தகுதி வாய்ந்த சாம்பியன்களை அடையாளம் கண்டிட மூன்று சிறப்பம்சங்களைக் கொண்டிருக்கின்றது.
    - முதல் அம்சம் 18 வகையான விளையாட்டுக்களைப் பற்றிய ஒழுங்குமுறைகள் மற்றும் அடிப்படை விதிமுறைகள் பற்றி பயனாளிகளுக்கான தகவல்களை அளிக்கின்ற ஆரம்பநிலைக் கையேடு ஆகும்.
    - இரண்டாவது அம்சம் நாடு முழுவதுமான விளையாட்டு வசதிகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கியதாகும்.
    - மூன்றாவது அம்சம் இளைய தடகள வீரரின் உடற்தகுதியினைத் தெரிந்து கொள்ள எடுக்கப்படும் 8 தேர்வுகளைக் கொண்டிருக்கின்றது.

## சர்வதேசச் செய்திகள்

### புதிய அரசியலமைப்பு மீதான வாக்கெடுப்பு


- கியூபாவில் தனிநபர் சொத்துரிமை அங்கீகாரத்தைக் கொண்டிருக்கும் ஒரு புதிய அரசியலமைப்பு மீதான வாக்கெடுப்பில் வாக்காளர்கள் பங்கு பெற்றனர்.
- இந்த வாக்கெடுப்பு புதிய வாக்கெடுப்பு மீது ஆம் மற்றும் இல்லை என்ற இரண்டு விருப்பத் தேர்வுகளை மட்டுமே கொண்டிருந்தது.
- 80 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டனர்.
- 1976 பதிப்பை மாற்றம் செய்யும் இந்த புதிய அரசியலமைப்பு, திறந்த சந்தை மற்றும் தனியார் முதலீடு ஆகியவற்றுக்கான கட்டுப்படுத்தப்பட்ட உரிமையை கம்யூனிசக் கட்சியின் கட்டுப்பாட்டில் மட்டுமே கொண்டிருக்க அங்கீகாரம் அளிக்கின்றது.
- இது நாட்டின் ஒரே சித்தாந்தமாக பொதுவுடைமையை மேற்கோள் காட்டுகின்றது.
- பொதுவாக தேர்தல்களைப் புறக்கணித்திட அழைப்பு விடுக்கும் அல்லது வாக்குச்

சீட்டுகளை சேதாரப்படுத்தும் கியூபாவின் தடை செய்யப்பட்ட எதிர்க்கட்சியானது இம்முறை ‘இல்லை’ என்ற விருப்புரிமையின் மீது வாக்களிக்க பிரச்சாரம் செய்தது.

# மாநிலச் செய்திகள்

## கழிவு நிலையிலிருந்து வியப்பு நிலைக்கான பூங்கா

- தெற்கு டெல்லி மாநகராட்சிக் கழகத்தின் கீழ் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் “கழிவிலிருந்து வியப்பு” என்ற பூங்காவைத் துவக்கி வைத்தார்.
- இப்பூங்கா உலகின் ஏழு அதிசயங்களின் மாதிரிகளைக் கொண்டிருக்கின்றது.
- இந்த அனைத்து சிற்பங்களும் தொழிற்சாலைக் கழிவு மற்றும் இதர வகைக் கழிவுகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது. இந்த தயாரிப்பு கழிவு முதல் வியப்பு வரை என்ற பெயரை நியாயப் படுத்துகின்றது.
- தெற்கு டெல்லி மாநகராட்சிக் கழகமானது இப்பூங்காவின் கட்டுமானத்தைக் கட்டியிருக்கின்றது.
- இப்பூங்கா சூரிய ஒளி மற்றும் காற்று சக்தியால் இயக்கப்படுகின்றது.



## பிரணாம் ஆணையம்


- அசாம் மாநில முதல்வர் சார்பானந்தா சோனோவால் பிரணாம் ஆணையத்தை துவங்கி வைத்திருக்கின்றார்.
- இந்த குழு “மாநில அரசு ஊழியர்களின் பெற்றோர்களின் பாதுகாப்பு” என்ற மசோதா பற்றிய விவகாரங்களை களைந்திட ஏற்படுத்தப்பட்டதாகும்.
- பிரணாம் என்பது பெற்றோர் கடமை மற்றும் பொறுப்புடைமை மற்றும் கண்காணிப்பு மீதான விதிமுறைகள் என்ற விரிவாக்கமாகும்.
- பிரணாம் மசோதா கடந்த வருடம் அசாம் மாநில அமைச்சரவையால் ஒப்புதளிக்கப்பட்டதாகும்.
- இம்மசோதா மாநில அரசு ஊழியர்கள் தங்கள் பெற்றோர்களையும், தங்களுக்கென்று

சுய வருமானமில்லாத திருமணமாகாத மாற்றுத் திறனாளி உடன்பிறப்புகளையும் கவனித்துக் கொள்வதைக் கட்டாயமாக்குகின்றது.

# முக்கிய தினங்கள்


## சர்வதேச துருவ கரடி தினம் – பிப்ரவரி 27

- ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 27-ம் தேதி சர்வதேச துருவ கரடி தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- குறைந்தபட்சம் 2011-ம் ஆண்டிலிருந்து இத்தினம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- வருடந்தோறும் கல்விக்கான சவால்களுக்கு நிதியளித்திடும் சர்வதேச துருவ கரடி அமைப்பால் இத்தினம் நிறுவப்பட்டதாகும்.
- இத்தினம் உலகம் முழுவதும் குறைந்து கொண்டு வரும் துருவக் கரடிகளின் எண்ணிக்கை பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க வடிவமைக்கப்பட்டதாகும்.





## தேசிய அறிவியல் தினம் – பிப்ரவரி 28

- அறிவியல் துறையில் நோபல் பரிசு பெற்ற சர்.சி.வி. ராமனின் பங்களிப்பினை அங்கீகரித்திடுவதற்காக ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 28-ம் தேதி தேசிய அறிவியல் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 1928 ஆம் ஆண்டு இத்தினத்தில் மிகப் புகழ்வாய்ந்த இந்திய அறிவியலாளர் சி.வி. ராமன் “ராமன் விளைவு” என்பதைக் கண்டுபிடித்தார்.
- 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 28-ம் தேதி முதல்முறையாக தேசிய அறிவியல் தினம் அனுசரிக்கப்பட்டது.
- இவ்வருடத்திற்கான தேசிய அறிவியல் தினத்தின் கருத்துரு, “மக்களுக்காக அறிவியல் மற்றும் அறிவியலுக்காக மக்கள்” என்பதாகும்.
- கடந்த வருடத்தின் கருத்துரு, “நீடித்த எதிர்காலத்திற்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்” என்பதாகும்.




## அரிதான நோய் தினம் – பிப்ரவரி 28

- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 28-ம் தேதி என்பது அரிதான வியாதிகளுக்காக ஐரோப்பிய நிறுவனத்தால் ஒருங்கிணைக்கப்படும் 12-வது சர்வதேச அரிதான நோய் தினம் ஆகும்.
- அரிதான நோய் தினம் என்பது இவ்வகையான அரிதான நோய்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதத்தின் கடைசி தினம் அன்று அனுசரிக்கப்படுகின்றது.




- 2019 ஆம் ஆண்டிற்கான அரிதான வியாதி தினத்தின் கருத்துரு, “சுகாதாரத்தையும் சமூகப் பாதுகாப்பையும் இணைத்தல்” என்பதாகும்.
- இத்தினம் முதலில் EURORDIS (European Organisation for Rare Diseases) அமைப்பு மற்றும் அதன் தேசிய கூட்டாளிகளின் குழுவால் 2008-ம் ஆண்டு துவங்கப்பட்டதாகும். 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி 29-ம் தேதி முதல் அரிதான வியாதி தினம் அனுசரிக்கப்பட்டது.

- - - - - - - - - - - - - - -